ORIGINAL ARTICLE

# சைவம் காத்த சான்றோர்
# [CAIVAM KĀTTA CĀṈṞŌR]

# SCHOLARS – THE PROTECTORS OF SAIVISM

**அன்பரசன் அருணாசலம்*[1] / Anbarasan Arunachulan*[1]**
**கஜேந்திரன் கருணாநிதி [2] / Gajendran Karunanithi [2]**

[1] Department of Modern Language, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia. Email: nasarabna3108@gmail.com
[2] Rutgers, The State University of New Jersey, United State of America. Email: gajenkarun@gmail.com

*Corensponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/79

**Abstract**

Saivism is one of the world's ancient religions. It is believed that the Tamils of ancient India who embraced Saivism have been worshipping Sivaperuman as their Supreme Being for a good 10,000 years. However, this religion is facing many challenges to expand due to the influences of other theological ideologies especially the Vedic Religion, Jainism and Buddhism. Three consequential Scholars namely Thirunyanasambanthar, Thirunavukkarasar and Suntharar have played a pivotal role in the efforts to revive Saivism from the brink of extinction. Thirunyanasambanthar and Thirunavukkarasar have performed miraculous wonders to prove the majestic divinity of Saivism to the world. Their fruitful efforts were proven when some of the atheistic kings and people of the Tamil kingdoms reverted to Saivisim. With an ardent belief, tenacious virtue and grace of Sivaperuman, the Scholars have successfully thwarted the propagation of other ideologies by benedictory actions. Those Scholars have also been established as exemplary role-models in the daily lives of all Saivites.

**Key words:** Scholars, challenges, miraculous wonders, revive

**ஆய்வுச் சாரம்**

சைவ சமயம் காலத்தால் மிகத் தொன்மையானது. பத்தாயிரம் ஆண்டகளுக்கு முன்னமே தமிழர்கள் சைவர்களாகச் சிவபெருமானைப் போற்றி வழிபட்டு வந்துள்ளனர். ஆயினும் பிற்காலத்தில் சைவ சமயம் புறச்சமயங்களின் தாக்கத்தினால் நலிவு கண்டது. வைதீக பண்பாடு, சமணம் மற்றும் பௌத்தம் போன்ற சமயக் கொள்கைகள் சைவ சமய வளர்ச்சிக்கு இடராக அமைந்தன. சைவ சமயத்தை மீண்டும் மீட்சி பெறச் செய்யும் பொருட்டு மூவர் முதலிகளான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் திருஅவதாரம் செய்தனர். குறிப்பாகத்

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அறப்போராட்டம் நிகழ்த்தி சைவத்தின் பெருமைதனை உலகிற்கு எடுத்தியம்பினர். இறை மறுப்புக் கொள்கைக்கு உட்பட்ட அரசனையும் மக்களையும் மீண்டும் சைவ சமயத்திற்கு மீட்டு வந்து சமய புரட்சியை ஏற்படுத்தினர். பத்தி வைராக்கியம் கொண்டு வழிபாடு செய்தல் மட்டுமல்லாது சைவ சமயத்தைக் காக்கும் பொருட்டு இறைவனின் திருவருள் துணையோடு அருட்செயல்கள் செய்து புற சமயத்தினை நேரடியாக வெற்றி கொண்டதோடு வைதீக பண்பாட்டை மறைமுகமாக எதிர்த்தும் சைவ மீட்சிக்குத் துணை புரிந்து மக்களுக்கு நல்வழிகாட்டியாகத் திகழ்ந்தனர்.

**கருச்சொல்**: சான்றோர், இடர், அறப்போராட்டம், மீட்சி

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 10th May 2020, revised 30th May 2020, accepted 8th June 2019

**முன்னுரை**

சிவனைப் பரம்பொருளாகப் போற்றும் சமயம் சிவனியம் எனப்படும். அதுவே சைவம் என்றானது. “முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளே” என்ற மாணிக்கவாசகரின் வாக்கிற்கு ஒப்ப சிவப் பரம்பொருளைப் போற்றும் சைவ சமயம் காலம் கடந்தது.

சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி மொஹஞ்சோதாரோ மற்றும் ஹரப்பாவில் புதைப்பொருள் ஆராய்ச்சியினைச் செய்த சர் ஜோன் மார்ஷல் எனும் புதைப்பொருள் ஆராய்ச்சியாளரின் ஆய்வு முடிவின்படி பத்தாயிரம் (10,000) ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் சைவர்களாகவும் சிவபெருமானைப் போற்றி வழிபட்டும் வந்துள்ளனர் புதைப்பொருள் ஆராய்ச்சியின் வழி சிவபெருமானின் திருவுருவங்களான சிவலிங்கம், நடராசர், தென்முகக் கடவுள் (தட்சிணா மூர்த்தி), நந்தி ஆகிய திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே சைவ சமயம் மிகத் தொன்மையான சமயம் என்பது வெள்ளிடை மலை (நாகப்பன் ஆறுமுகம், 2008)[1].

சான்றோர்கள் சமயத்தைக் காத்தனர் எனில் சமயத்திற்கு எவ்வகையினும் இடர் வந்திருக்க வேண்டும் அல்லவா? அவ்வகையான இடர்கள் என்ன என்பதை அறிதல் அவசியம்.

**(அ) சைவத்தின் இடர்கள்**

(i) வைதீக பண்பாடு

தொன்மையான சைவ வழிபாட்டினை மேற்கே இருந்து அதாவது காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடையில் நாடோடியாக வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டம் இயற்கை மாறுபாட்டால் இடம் பெயர்ந்து இந்தியாவிற்குள் நுழைந்தது. ஆரியனின் தர்ம சாஸ்திரங்கள் (வேதம், ஸ்மிருதி) வைதீக பண்பாட்டை உருவாக்கின. இப்பண்பாடு இந்திய பெருநிலம்

முழுவதும் இருந்த சமயங்களில் கலந்தது. மன்னர்களும் (சேர, சோழ, பாண்டியன்) உலகியல் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வேத வேதியர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்தனர் (கந்தையா பிள்ளை, 2003)[2].

(ii) <u>சமணம் மற்றும் பௌத்தம்</u>

ஏறத்தாழ கி.பி 250 வாக்கில் காளத்தி மலைப்பகுதியில் வாழ்ந்த களவர் எனும் களப்பிரர்கள் தமிழ் நாட்டின் மீது ஓயாது படையெடுத்துப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினர். இதனால் சைவமும் தமிழும் நலிந்து போயின. பின்னர் வடக்கே பீகார் மாநிலப் பகுதியில் வாழ்ந்த பல்வர்கள் களப்பிரர்களைத் தோற்கடித்து ஆட்சியைப் பிடித்தனர். முக்கியமாக கி.பி 6ஆம் நூற்றாண்டின் பல்லவப் பேரரசனான சிம்ம விஷ்ணு களப்பிரர்களை முறியடித்த மன்னர்களில் குறிப்பிடத்தக்கவன். பல்லவர்கள் காலத்தில் சமணம் மற்றும் பௌதத்தால் சைவம் பெரிதும் தாக்குண்டது (இராசமாணிக்கனார், 1999)[3]. சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டில் காலூன்றியது. பன்னெடுங்காலமாக மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்த சிவ வழிபாடு நலிவடையத் தொடங்கியது. சைவத்தையும் தமிழையும் மீட்டெடுக்கும் பெரும் பணியில் கி.பி 6 மற்றும் 7ஆம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் திருஅவதாரம் செய்தனர். கி.பி 8ஆம் நூற்றாண்டில் சுந்தரரின் திருஅவதாரமும் சைவத்தை மேலும் மேன்மையடையச் செய்தது. சுந்தரரின் காலத்திற்கு முன்னும் பின்னும் பல்வேறு அடியார் பெருமக்கள் தோன்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்துள்ளனர் (இராசமாணிக்கனார், 2002)[4]. கி.பி 5 முதல் கி.பி 12 வரை பத்தி இயக்கக் காலமாகச் சைவ சமய ஆன்றோர்களால் வரையறுக்கப்பட்டுள்ளது. சமய சான்றோர்களின் வருகை சைவ சமயத்தை மீட்டும் எழுச்சிப் பெறச் செய்தது.

சான்றோர்களின் சமயப் புரட்சியைச் சேக்கிழார் பெருமான் பத்தி சுவை நனி சொட்ட சொட்டப் திருத்தொண்டர் புராணத்தில் பாடியுள்ளார். சைவத் திறவுகோலாகவும் சைவக் களஞ்சியமாகவும் விளங்கும் பெரிய புராணம் எனும் திருத்தொண்டர் புராணம் பிறமொழிக் கலப்பில்லாது அருளப்பட்ட செந்தமிழ்க் காப்பியம். ஒரு காப்பியத்திற்குரிய கூறுகள் அனைத்தும் தன்னகத்தே கொண்டுள்ள பெரிய புராணம் சைவ பெருமக்களால் அடியார் வரலாற்றுக் காப்பியம் என்று புகழப்படுகின்றது (கு.சுந்தரமூர்த்தி, 2014)[5]. பெரிய புராணம் சான்றோர்களாகிய நாயன்மார்களின் வரலாற்றினையும் அவர்களின் ஆற்றிய பணியினை மட்டும் கூறும் காப்பியமல்ல மாறாக, மக்களின் அக இருளை நீக்க அருளியது என்கிறார் சேக்கிழார்,

> இங்கு இதன் நாமம் கூறின் இவ்வுகலத்து முன்னாள்
> தங்கு இருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
> பொங்கிய இருளை, ஏனைப் புறஇருள் போக்குகின்ற
> செங்கதிரவன் போல் நீங்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்
> (பெரிய புராணம், பாயிரம் – பாடல் 10)

இத்துணைப் பெருமை வாய்ந்த பெரிய புராணத்தை அருளிச் செய்ய சேக்கிழார் பெருமான் திருஅவதாரம் நிகழ்ந்திராவிடில் நாயன்மார்களின் பெருமையையும் தமிழ் வேதமான திருமுறைகளின் பெருமையையும் மேலும் தூய சிவபத்தியையும் நாம் அறிந்திராமல் போயிருப்போம் என்கிறார் பூவை கல்யாண சுந்தரனார் (2000)[6],

> பெந்தமெல்லாம் போக்கும் பெரியபுரா ணம்தந்த
> எந்தைபிரான் சேக்கிழார் இவ்வுலகில் வந்திலரேல்

நாயன்மார் கீர்த்தி எங்கே? நல்ல தமிழ் வேதமெங்கே?
தூய சிவ பத்தி எங்கே சொல்?

நாயன்மார்கள் சிவபெருமான் மீது வைத்திருந்த பத்தி வைராக்கியத்தைக் கிஞ்சிற்றும் கற்பனை சேர்க்காமல் உண்மைப் பதிவாக வடித்த சேக்கிழாரின் பெருமைதனைக் கொற்றவன்குடி உமாபதி சிவம், சேக்கிழார் புராணம் எனும் நூலின் வழி இராமாயணம் எழுதிய வான்மீகி முனிவரைக் காட்டிலும் மகாபாரதம் பாடிய வேதவியாசரைக் காட்டிலும் மேலும் குறுமுனி எனப்படும் அகத்தியரைக் காட்டிலும் மிகப்பெருமை உடையவர் குன்றை முனி என அழைக்கப்படும் சேக்கிழார் பெருமான் எனப் புகழாரம் சூட்டுகின்றார்,

மதுர இராமாயண கதை உரைசெய்த
வான்மீகி பகவனும் ஒப்பல்ல:
விதிவழி பாரதம் உரை செய்துகரை
செய்த வேத வியாதன்யும் ஒப்பல்ல:
சிதைவற ஆயிர நாவுடன் அறிவுள
சேட விசேடனும் ஒப்பல்ல:
பொதியமலைக் குறுமுனிவனும் ஒப்பல்ல
புகழ்புனை குன்றை முனிக்கு

(சேக்கிழார் புராணம், பாடல் 91, உமாபதி சிவம்)

அத்துணைச் சிறப்பு வாய்ந்த பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் வெறும் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினை மட்டும் பாடவில்லை மாறாக சமுதாயத்திற்குப் பயனான அனைத்துச் செய்திகளையும் அடியார் பெருமக்களின் வாழ்வின் வழி நமக்கு உணர்த்துகிறார்.

### (ஆ) சைவத்தைக் காத்தது

பல்லவர் காலத்தில் சமணம் பௌத்தம் மட்டுமல்லாது வடக்கே இருந்து வந்த வைதீக சமயமும் இருந்துள்ளது. சிவ பூசகர்கள் திருக்கோயில்களில் பூசை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வைதிகர்கள் கோயில்களை ஆக்கிரமித்தனர். பல்லவர்கள் வடக்கே இருந்து வந்த காரணத்தினால் வடக்கிலிருந்து வைதிகர்களை அழைத்து வந்து சிவத் தலங்களில் பூசைகள் செய்ய நியமித்தது வியப்பில்லை (ஞானசம்பந்தன், 1999)[7].

நலிந்த சைவத்தை மீட்டெடுக்க திருஞானசம்பந்தர் அவதாரம் செய்தார். திருஞானசம்பந்தர் சைவமரபு வழி வந்தவர் என்கிறார் சேக்கிழார். இதனை அவரின் தாய் தந்தையரின் மரபினைக் கூறுகையில்,

"மரபிரண்டும் சைவநெறி வழி வந்த கேண்மையினார்
அரவணிந்த சட்சிமுடியார் அடியலால் அறியாது"

(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 17)

என்கிறார், மேலும் திருஞானசம்பந்தரின் திருஅவதாரத்தின் நோக்கமே புறப்புறச் சமயங்கள் ஒழியவும் சைவம் தழைக்கவும் என்பதற்காகவே. இதனைச் சேக்கிழார் பின்வருமாறு பாடுகிறார்,

"…அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல"
(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 24)

எனவும்

"அமண் முதலாம் பரசமயக் பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ் பட"
(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 25)

எனும் பாடல்கள் வழி உறுதிபடுத்துகிறார் சேக்கிழார். ஆக, சைவத்தைக் காக்கும் முயற்சியில் முகான்மையானது இறையிலிக் கொள்ளைகளான சமண பௌத்த மதங்களை முறியடித்து இறை உண்மையை நிறுவியது சான்றோர் சைவத்தைக் காத்த முறைமையாகும்.

(i) திருஞானசம்பந்தரின் சமண முறியடிப்பு

மதுரை (பாண்டிய நாடு)

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சமண பௌத்த மதத்தை எதிர்த்துப் போரிட்டு இறை உண்மையை நிலை நாட்டியச் செய்தியினைச் சேக்கிழார் பெருமான் பாடுகிறார். திருமறைக்காட்டில் சம்பந்தரும் அப்பரும் தங்கியிருந்த போது பாண்டிய நாட்டில் உண்மை தன்மையில் நில்லாது தீவினைப் பயனான சமண சமயம் மிகுந்து, நல்லொழுக்க நெறிமுறை நீங்கியது என்கிறார் சேக்கிழார்,

இவ்வகை இவர்கள் அங்கண் இருந்தனராக இப்பால்
செய்வகை இடையே தப்பும் தென்னவன் பாண்டி நாட்டு
மெய்வகை நெறியில் நில்லா வினைஅமண் சமய மிக்குக்
கைவகை முறைமைத் தன்மை கழியமுன் கலங்குங் காலை
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 599)

இதன்கண், பாண்டிய நாட்டின் பட்டத்து அரசியான மங்கையர்கரசியின் அழைப்பை ஏற்றுப் பாண்டிய நாடு புகுந்தார் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தரின் வருகையைக் கண்டு அச்சமுற்றனர் சமணர்கள். சம்பந்தரின் வருகையில் சமணம் ஆட்டம் கண்டது. சைவத்தின் முதல் வெற்றி இது!

வழுதி மா நகர் அதனிடை மாமறைத் தலைவர்
பழுதில் சீரடியாருடன் பகல்வரக் கண்ட
கழுது போல் வரும் காரமண் குண்டர்கள் கலங்கி
இழுது மையிருட் கிருளென ஈண்டினே ஒருபால்
(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 678)

என சமணர்களின் அச்சத்தைப் பாடுகிறார் சேக்கிழார். பேய் போன்று கரிய சமணர்கள் சம்பந்தரின் வருகையைக் கண்டு கலங்கி இருள் போல கூடினர் என்கிறார் சேக்கிழார். வஞ்சனை மிகுந்த சமணர்கள் திருஞானசம்பந்தர் தம் அடியார் பெருமக்களுடன் தங்கியிருந்த மடத்திற்குத் தம் மந்திர சக்தியால் தீவைக்க முயற்சிக்கவே அது தோல்வியில் முடிந்தது.

ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும்
மாதிரத்தினும் மற்றை வந்திர விதி வருமே
பூதி சாதனர் மடத்தில் தாம் புனைந்த சாதனைகள்
சாதியா வகை கண்டமண் குண்டர்கள் தளர்ந்தார்
(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 698)

இங்கு திருஞானசம்பந்தரின் வழி சைவ சமயத்தின் திறம் வெளிப்பட்டது. பின்னர் கையில் தீ ஏந்தி மடத்திற்குத் தீ வைத்தனர். அத்தீயே சம்பந்தரின் வாக்கின்படி பாண்டிய மன்னனை வெப்பு நோயாகப் பற்றியது. பாண்டிய மன்னனின் வெப்பு நோயினைத் தீர்த்துப் பாண்டிய மன்னனைச் சைவனாக்கினார். இச்செய்திதனைச் சேக்கிழார் பின்வருமாறு பதிவு செய்கிறார்,

மீனவன் தன்மேல் உள்ள வெப்பெல்லாம் உடனே மாற
ஆன பேரின்பம் எய்தி உச்சி மேலங்கை கூப்பி
மானம் ஒன்று இல்லார் முன்பு வன்பிணி நீக்க வந்த
ஞானசம்பந்தர் பாதம் நண்ணி நான் உய்ந்தேன் என்றான்
(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 772)

அனல் மற்றும் புனல் வாதம் பூண்டு ஒப்பில்லா மணியான சிவபெருமானின் திருவருளினால் சமணர்களைத் தோற்கடித்தார். சமணர்கள் தமக்குத் தாமே உறுதி பூண்டபடி கழுவேறினர்.

திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னனின் வெப்பு நோயினைத் தீர்த்து, சமணர்களை வென்று இறை உண்மையை உணர்த்தவே அதன் பயனாக சமணம் சார்ந்த பாண்டிய நாடு மீண்டும் சிவநெறியைச் சிரமேற்கொண்டது. பாண்டிய நாட்டில் சமணம் எனும் இருள் விலகி சைவம் எனும் ஒளி பிரகாசித்தது. இதனைச் சேக்கிழார் பின்வருமாறு பாடுகிறார்,

தென்னவன் தனக்கு நீறு சிரபுரச் செல்வர் ஈந்தார்
முன்னவன் பணிந்து வாங்கி முழுவதும் அணிந்து நின்றான்
மன்னன்நீ றணிந்தான் என்று மற்றவண் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்கள் எல்லாம் தூயநீ றணிந்து கொண்டார்
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 857)

திருநாவுக்கரசருக்குப் பல இன்னல்களை விளைவித்த சமணத்தை எதிர்த்துச் சைவப் போர் புரிந்து அதில் வெற்றி கண்டு பாண்டிய நாடே சைவ மணம் கமழச் செய்த ஞானத்தின் திருவுருவான சம்பந்தரைக் காண அவரது தந்தையார் மதுரை வருவதைப் பின்வருமாறு பாடுகிறார் சேக்கிழார்,

ஆனபுகழ்த் திருநாவுக் கரசர்பால் அவஞ்செய்த
மானமிலா அமணருடன் வாதுசெய்து வெல்வதற்கும்
மீனவன்தன் நாடுய்ய வெண்ணீறு பெருக்குதற்கும்
போனவர்பாற் புகுந்தபடி அறிவனெனப் புறப்படுவார்
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 874)

திருவோத்தூர் (நடு நாடு)

தற்போது செய்யாறு எனப்படும் திருவோத்தூரில் திருஞானசம்பந்தர் சமணர்களுக்கு இறை உண்மையை நிலைநாட்டி அவர்கள் சைவம் சாரும்படிச் செய்தார். அத்திருத்தலத்தில் வாழ்ந்த சிவனடியார் ஒருவர் திருவோத்தூர் திருக்கோயிலில் உறையும் வேதபுரீஸ்வரர் எனும் திருப்பெயர் கொண்ட பெருமானுக்கு வளர்த்த பனை மரங்கள் ஆண் பனைகளாகக் காயின்றி இருக்கவே சமணர்கள் பழிச்சொல்லுக்கு ஆளானார். திருஞானசம்பந்தர் வருகையின் போது அக்குறையைத் திருஞானசம்பந்தரிடம் கூறவே, அவர் 'பூத்தேந்தாயன கொண்டு நின் பொன்னடி' (திருமுறை 1 பதிகம் 54) எனும் திருப்பதிகத்தை அருளவே அப்பனை மரங்கள் பெண் மரங்களாக மாறி குலை ஈந்தன. சேக்கிழார் பெருமான் இச்செய்தியைப் பின்வருமாறு பாடுகிறார்,

விரும்பு மேன்மைத் திருக்கடைக்காப்பதனில் விமலர் அருளாலே
குரும்பை ஆண் பனைஈனும் என்னும் வாய்மை குலவுதலால்
நெருங்கும் ஏற்றுப் பனையெல்லாம் நிறைந்த குலைக ளாய்க்குரும்பை
யரும்பு பெண்ணை யாகியிடக் கண்டா ரெல்லாம் அதிசயித்தார்
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 980)

இச்செயலைக் கண்ணுற்று திகைத்த சமணர்கள் சிலர் அங்கிருந்து நீங்கிச் செல்ல சிலர் தங்கள் கைகளில் உள்ள கமண்டலத்தைத் தூக்கி எறிந்து பொன்னார் மேனியனான சிவபெருமானே இறைவன் என போற்றினர்.

தென்னாட்டு அமண் மாசுஅறுத்தார் தம் செய்கை கண்டு திகைத்த அமணர்
அந்நாட்டதனை விட்டு அகல்வார் சிலர் தங்கையிற் குண்டிகைகள்
என்னாவன மற்றிவை யென்று தகர்ப்பார் இறைவன் ஏறுயர்த்த
பொன்னார் மேனிப் புரிசடையான் அன்றே என்று போற்றினார்
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 982)

இவ்வற்புதச் செயலின் வழி சமணத்தை வெற்றி கண்டதோடு சமயத்தைக் காத்தார் சான்றோர் பெருமகனார் சம்பந்தர்.

திருமயிலை (தொண்டை நாடு)

திருமயிலையில் பூம்பாவையை உயிர்ப்பித்தது பொய்யர்களான சமணர் சாக்கியர் (பௌத்தர்) துறை அழிய ஏற்பட்டதுவே என்கிறார் சேக்கிழார்,

அத்திறத்து முன் நிகழ்ந்தது திருவுள்ளத்து அமைத்துச்
சித்தம் இன்புறு சிவநேசர் தம்செயல் வாய்ப்பப்
பொய்த்த வச்சமண் சாக்கியர் புறத்துறை அழிய
வைத்தவப்பெருங் கருணைநோக்கால் மகிழ்ந்தருளி
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 1076)

ஆளுடைப் பிள்ளையான திருஞானசம்பந்தர் "மட்டிட்ட புன்னையம்" (திருமுறை 2 பதிகம் 47) எனும் திருப்பதிகத்தை அருளி எலும்பும் சாம்பலுமான பூம்பாவையை மீண்டும் உயிர்ப்பித்த

அற்புத நிகழ்வைக் கண்ட சமணர்களும் வேற்று மதத்தினரும் எதுவும் அறியாத நிலையில் அச்சமுற்றுச் சோர்ந்து வீழ்ந்தனர் என்கிறார் சேக்கிழார் பெருமான்,

அங்கவள் உருவங் காண்பார் அதிசயம் மிகவும் எய்திப்
பங்கமுற்றாரே போன்றார் பரசமயத்தின் உள்ளோர்
எங்குள செய்கை தான் மற்றென்செய்த வாதி தென்று
சங்கையாம் உணர்வு கொள்ளும் சமணர் தள்ளாடி வீழ்ந்தார்
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 1094)

இவ்வாறு திருஞானசம்பந்தர் சமண சமயத்தில் சிக்குண்டு கிடந்த மக்களின் அறியாமையைப் போக்கி, இறைவன் எனும் பரம்பொருள் ஒருவர் உண்டு என்ற இறை உண்மையை மக்களுக்குத் தெளிவித்து அவர்களைச் சமணம் எனும் இருளில் இருந்து சைவம் எனும் ஒளிக்கு மீட்டு வந்தார்.

(ii) <u>திருநாவுக்கரசரின் சமண முறியடிப்பு</u>

<u>திருவதிகை (நடு நாடு)</u>

சிவபெருமானின் திருவருளின்மையினால் திருநாவுக்கரசர் சமணம் சார்ந்து ‘தருமசேனர்’ எனும் தலைவரானார். அவரின் தமக்கை திலகவதியார் திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் வீரட்டானேஸ்வரரின் திருமுன் தம் தம்பியை மீட்டுத் தரும்படி விண்ணப்பம் வைக்கவே, திருநாவுக்கரசர் சிவபெருமானால் சூலை நோய்க்கு ஆட்பட்டார். பின்னர் திருவதிகைச் சார்ந்து மீண்டும் சைவம் சார்ந்தார். மீண்டும் சைவம் சாந்த திருநாவுக்கரசரின் செயலைக் காணப் பொறாத சமணர்கள், இதனால் சமணம் அழிந்து ஒழியும் என அச்சம் கொண்டு பல்லவ மன்னனான மகேந்திரவர்மனிடம் திருநாவுக்கரசரைப் பற்றி பொய் மொழிந்தனர்

இவ்வகைப் பல அமணர்கள் துயருடன் ஈண்டி
மெய்வகைத் திறம் அறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவனாகி நம் விருத்தியும் தவிர்க்கும் மற்று இனி நாம்
செய்வதென்ன என வஞ்சனை தெரிந்து சித்திரிப்பார்
(திருநாவுக்கரசர் புராணம், பாடல் 82)

சமணர்களின் பொய் மொழிகளின் நம்பகத்தன்மையை அறியா மன்னன், திருநாவுக்கரசருக்கு இன்னல்களைத் தர ஆணை பிறப்பித்தான். ஒவ்வொரு இன்னலையும் இறைவனின் திருவருளால் தகர்த்தெறிந்து சைவத்தைக் காத்தார் திருநாவுக்கரசர்.

நீற்றறையில் இட்டபோது அஞ்சாமல் அம்பலத்தில் கூத்து இயற்றும் பெருமானின் திருவடி நிழலைத் தமைமேற்கொண்டு உறுதி பூண்ட மனத்தால் எவ்வித இன்னல்களுக்கும் ஆளாகாமல் “மாசில் வீணையும்” (திருமுறை 5 பதிகம் 90) என பதிகம் அருளி அருள் மயமாக இருந்தார். இதனைச் சேக்கிழார் பெருமான் பினவருமாறு பாடுகிறார்,

வெய்ய நீற்றறை அதுதான் வீங்கிள வேனிற் பருவந்
தைவரு தண் தென்றல் அணை தண்கழுநீர்த் தடம்போன்று

மொய் ஒளி வெண்ணிலவு அலர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர் திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்ததே
(திருநாவுக்கரசர் புராணம் – பாடல் 98)

வெப்பத்தை உடைய அந்நீற்றறையே மிக்க இளவேனிற் காலத்தில் வீசி வருகின்ற குளிர்ந்த தென்றல் அணை கின்ற, தண்ணிய கழுநீர் மலர்கள் நிறைந்த வாவி போன்று ஒளிமிக்க வெண்மையான முழுமதியின் ஒளிவிரிந்து, ஒலிக்கின்ற யாழின் ஒலியுடன் கூடியதாய் இறைவரின் திருவடி நீழலினது அருள் மயமாய்க் குளிர்ந்தது.

ஏழு நாட்களுக்குப் பிறகு நீற்றறையைத் திறக்கையில் எவ்வித குறைபாடும் இல்லாது மகிழ்வுடன் வீற்றிருந்த திருநாவுக்கரசரைக் கண்டு வியப்படைந்தனர் சமணர்கள். எப்படி சாத்தியமானது? பதில் கூறுகிறார் சுந்தரர்,

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்" (7.39.11)

என்பது திருத்தொண்டர்த் தொகை அருளிய சுந்தரமூர்த்தி நாயனாரின் வாக்கு. சுந்தரமூர்த்தி நாயனார் தம்மை, நிலைபெற்ற திருவாகிய செம்பொருளான சிவபெருமானையே உறுதியாகப் பற்றி வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரின் அடியார்க்கும் அடியேன் என்கிறார்.

சமணத்தில் முன்பு கற்றறிந்த வித்தைகளைக் கொண்டு இறவாது பிழைத்துக் கொண்டார் திருநாவுக்கரசர் என மொழிந்தனர் முடைவாய் சமணர்கள். அறிவால் செய்வது கடவது எனக்கூறி கொடிய நஞ்சை ஊட்ட முடிவெடுத்தனர். அரசனும் அவர்களின் சொற்படி கேட்டு அதன்படியே நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்தனர் (வைத்திய நாதன், 1995)[8]. இதனை தம் திருமுறையில் குறிப்பிடுகிறார் நாவுக்கரசர்,

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்து ஓதி நாளும் அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சு அமுதாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே (திருமுறை 4:70:5)

இருள் நீங்கும் காலையிலும் மாலையிலும் பெருமானுக்கும் தமக்கும் உள்ள உறவை மறக்காமல் திருவைந்தெழுத்தை ஓதினால், நாடோறும் சிவனடிக்கண் அன்பு பெருகி வளரும். அத்தகைய அன்பு வளருவதன் பேறாக, செய்யும் வஞ்சனையால் பாற்சோற்றை நஞ்சுடன் கலந்து சமைத்து, நல்ல வழக்கம் இல்லாத சமணர்கள் கொடுத்த அந்த நஞ்சை, அமுதமாக்கி அருளினார் திருநனிபள்ளியடிகள்.

இச்செய்தியினைச் சேக்கிழார் பெருமானும் பதிவு செய்கிறார்,

நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு என்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்குந் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பாலடிசில் மிசைந்திருந்தார்
(திருநாவுக்கரசர் புராணம் – பாடல் 104)

பாற்சோற்றில் கொடிய நஞ்சு கலந்திருப்பினும் பெருமானின் திருவருளினைப் பற்றாகக் கொண்ட நாவுக்கரசர் அஞ்சாமல் அதனை உண்டார். கொடிய நஞ்சும் அமுதமானது! சைவத் திறமும் காக்கப்பட்டது. நஞ்சு கலந்த பாற்சோறும் நாவுக்கரசரை ஒன்றும் செய்யாத காரணத்தால், திகைத்த சமணர்கள், திருநாவுக்கரசர் உயிரோடு இருப்பின் தங்களுக்கு மரணம் வாய்க்கும் எனக் கருதி மன்னனிடம்,

நஞ்சு கலந்து ஊட்டிடவும் நம்சமயத்தினில் விடந்தீர்
தஞ்சமுடை மந்திரத்தால் சாதியா வகைதடுத்தான்
எஞ்சும் வகை அவற்கிலதேல் எம்முயிரும் நின்முறையும்
துஞ்சுவது திடம் என்றார் சூழ்வினையின் துறைநின்றார்
(திருநாவுக்கரசர் புராணம் – பாடல் 107)

'நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணச்செய்தும், நம் சமயத்தில் கொண்ட நஞ்சு நீக்கும் மந்திரத்தால், அதன்பயன் விளையாதவாறு தடுத்து விட்டான். அவன் இறக்கும் வகை இலதேல் எங்கள் உயிர்களும் உனது ஆட்சியும் அழியும்' எனத் தீமையை விளைவிக்கும் வஞ்சகத் தொழிலின் வழியில் நின்ற அச்சமணர்கள் உரைத்தனர்.

அவர்களின் சொல்லைக் கேட்ட மதிகெட்ட அரசனும் வேறு வழி யாது என வினவ மன்னனின் வலிய யானையை விட்டு இடறச் செய்வதே தகுந்த வழி என உரைத்தனர். மன்னனும் சம்மதித்தான். மதம் கொண்ட யானை திருநாவுக்கரசர் மேல் ஏவப்பட்டது. அவ்வானை, கட்டும் தறிகளைப் பிடுங்கிக் கொண்டு மலையென புறப்பட்டது. அவ்வானை, மாடங்களை இடித்தது; மண்டபங்களைப் பெயர்த்தது; அதன் வருகையைக் கண்டு பறவைக் கூட்டங்கள் அஞ்சின; மதநீர் மழை போன்று பெருகியது; இடி போன்ற ஓசை; கால் சுவடு நிலத்தில் பொதிந்தது; மரக்கிளைகளை பிளந்து போட்டது; மதில்கள் சரியுமாறுச் செய்தது.

அவ்வானை வருவதைக் கண்ட திருநாவுக்கரசர் முக்கண் முதல்வனான சிவபெருமானை எண்ணி, 5ஆம் வரி தோறும் அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை என்கிறார்**,**

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. (திருமுறை 4:2:1)

யானையை நோக்கித் திருப்பதிகம் அருளியதும் அவ்வானை, ஆளுடை அரசான திருநாவுக்கரசரை வணங்கி அங்கிருந்து விலகியது, ஆயினும் பாகர்கள் அதனைத் திருநாவுக்கரசர் மீது போகுமாறு செய்ய, அவ்வானை பாகர்களைக் கொன்றது, சமணர்கள் சிலரையும் மிதித்துக் கொன்றது. இதன் வழி அப்பர் பெருமான் சைவத்தைக் காத்து சமணத்தை அழித்தார். மானம் அழிந்த சமணர்களை நோக்கி சினம் கொண்ட மன்னன் "இனி செய்யக் கூடியது யாது?" என வினவினான். கல்லோடு கட்டி கடலில் வீசி எறிய ஆலோசனை கொடுத்தனர் வஞ்நெஞ்ச சமணர். மன்னனும் அவ்வாறே செய்ய கட்டளையிட ஆணையிட்டவாறே செய்தனர் சமணர்.

“எத்தகைய நிலையிலும் நான் என் தலைவனாகிய சிவபெருமானை வணங்குவேன்” என கிஞ்சிற்றும் அஞ்சாமல் “சொற்றுணை வேதியன்” (திருமுறை 4 பதிகம் 11) எனும் திருவைந்தெழுத்து திருப்பதிகத்தை அருளினார். பெருமானின் திருவருளினை நிரம்ப பெற்ற திருநாவுக்கரசரின் திருப்பாடலுக்குச் செவி சாய்க்காமல் இருப்பானா எம்பெருமான்? கரிய நெடிய கடலுள் அக்கல்லானது மிதக்கலாயிற்று.

இச்செய்தியினைப் பதிவு செய்த சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசரைத் தன் தலைமீது தாங்கிக் கொள்ளும் பேற்றினைப் பெற்றான் வருணன் என சிறப்பிக்கின்றார்.

அருள்நயந்து அஞ்செழுத்து ஏத்தப் பெற்ற
அக்கருணை நாவரசினைத் திரைக் கரங்களால்
தெருள்நெறி நீர்மையின் சிரத்தில் தாங்கிட
வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம்

**(**திருநாவுக்கரசர் புராணம்**,** பாடல் 131)

திருவருள் கூட்ட, திருவைந்தெழுத்தினால் தாங்கப் பெற்ற அக்கருணையே உருவான நாவுக்கரசரை, தன் அலைகளாகிய கைகளால் ஏந்தி, அவர் தம் பெருமையை அறிந்த முறையால், தன் தலைமீது தாங்கிக் கொள்ள, முன் காலத்தில் வருணனும் பெருந் தவத்தைச் செய்திருந்தனன்.

வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச்
சேர்ந்தடை கருங்கலே சிவிகை ஆயிட
ஏந்தியே கொண்டெழுந் தருளு வித்தனன்
பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்

**(**திருநாவுக்கரசர் புராணம்**,** பாடல் 131)

திருவருள் பெற்ற வருணனே, திருநாவுக்கரசரைச் சேர்ந்து அடைந்த கருங்கல்லே சிவிகையாய் ஆகிடத், தன்கைகளால் ஏந்தியவாறே கொண்டுவந்து, அழகிய திருப்பாதிரிப்புலியூர் எனும் திருப்பதியின் அருகே, கரையேறச் செய்தான். இவ்வாறு திருநாவுக்கரசர், அனைத்து இன்னல்களையும் தில்லைக் கூத்தன் திருவருளால் முறியடித்து இறை உண்மையை நிலை நாட்டினார்.

திருநாவுக்கரசருக்கு இன்னல்கள் விளைவிக்க ஆணை பிறப்பித்த பல்லவ மன்னன், திருநாவுக்கரசர் பரம்பொருள் சிவபெருமானின் திருவருள் நிரம்பப் பெற்றவர் என்பதும் சமணர்கள் மொழிகள் பொய் எனவும் தெளிந்தார். அதன் பொருட்டு பாடலிபுரத்தில் இருந்த சமணர்களை விரட்டியடித்து பின் அங்கிருந்த பள்ளிகளையும் பாழிகளையும் ஒருங்கே இடித்துத் தள்ளி குணபர ஈச்சரம் எனும் திருக்கோயிலை எழுப்பித்தார். இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பதிவு செய்கிறார்,

வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண் பள்ளியொடு பாழிகளுங்
கூடஇடித் துக்கொணர்ந்து குணபரவீச் சரம்எடுத்தான்

(திருநாவுக்கரசர் புராணம் – பாடல் 146)

சமணர்கள் பல்வேறு இன்னல்கள் விளைவித்த போதிலும் பெருமான் மீது கொண்ட பத்தி வைராக்கியத்தின் பயனாக சமணத்தை வென்றார் திருநாவுக்கரசர்.

பழையாறை (சோழ நாடு)

திருநாவுக்கரசர் தம் வாழ்நாள் முழுவதும் சைவ சமயத்தின் மீட்சிக்காகப் போரிட்டார். பழையாறை எனும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமானை வழிபட எத்தணித்த திருநாவுக்கரசர் திருக்கோயில் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அத்திருக்கோயில் சமணர்களின் வஞ்சனைச் செயலால் மறைத்துள்ளது என்பதைத் தன் திருக்குறிப்பால் அறிந்தார் திருநாவுக்கரசர். சமணர்களின் வஞ்சனை ஒழித்து சைவத்திறம் மேலோங்க வேண்டும் என்பதற்காக அத்திருக்கோயில் அருகே அமர்ந்து சமணர்கள் சூழ்ச்சி ஒழித்தருள வேண்டும் என பெருமானை வேண்டித் தொழுதார்.

செம்பொற்சோதியான சிவபெருமான் மன்னனின் கனவில் தோன்றி வஞ்சனையால் திருக்கோயில் மறைக்கப்பட்டதையும் நெறியில்லா சமணர்களை அழித்து நீக்கும்படியும் அருள்புரிந்தார். துயில் எழுந்த மன்னன், கனவில் கண்ட திருக்கோயிலைத் தம் அமைச்சர்களுக்குக் கூறி தானும் சென்றடைந்து சமணர்களை வேர் அறுத்தான். இதனைச் சேக்கிழார் பின்வருமாறு பாடுகிறார்,

கண்ட வியப்பு மந்திரிகட் கியம்பிக் கூடக் கடிதெய்தி
அண்டர் பெருமான் அருள்செய்த அடையாளத்தின் வழிகண்டு
குண்டர் செய்த வஞ்சனையைக் குறித்து வேந்தன் குலவுபெருந்
தொண்டர் தம்மை அடிவணங்கித் தொக்க அமணர் தூர்அறுத்தான்
(திருநாவுக்கரசர் புராணம் – பாடல் 298)

மதுரையில் சம்பந்தர் சமணத்தை அகற்றிய சைவத்தை நிலை நாட்டியது போல சோழ நாட்டில் திருநாவுக்கரசர் சமணத்தை அகற்றி சைவத்தை நிலை நாட்டினார்.

(iii) திருஞானசம்பந்தரின் பௌத்த முறியடிப்பு

சமணம் தமிழகத்தில் புகுந்த ஏறத்தாழ அதே காலகட்டத்தில்தான் பௌத்த மதமும் தமிழகத்தில் பரவியது (வைத்திய நாதன், 1995)[8]. சமணத்தை வென்ற திருஞானசம்பந்தர் போதி மங்கை எனும் ஊரில் பௌத்தர்களையும் வென்று சைவ சமயத்தின் பெருமைதனை நிலை நாட்டினார். பாண்டிய நாட்டில் சைவத்தை நிலை நிறுத்திய பின் சோழ நாடு திரும்பிய திருஞானசம்பந்தரின் வருகையை வெற்றியைச் சாற்றும் சிவச்சின்னங்கள் ஒலிக்கச் செய்து வரவேற்றனர் அடியார்கள். அச்சின்னங்களின் ஓசையை 'நாராசம்' எனக் கருதிய புத்த நந்தி திருஞானசம்பந்தர் முன் ஊதிக் கொண்டு வந்த சின்னங்களை விலக்கினான். அத்தருணத்தில் சம்பந்தர் தம் அடியவர்களை நோக்கி "இறை உண்மைக்கு மறுப்பானவர்களிடம் வாதம் புரிந்து இறை உண்மையை நிலை நாட்டுவது அழகானதே" என்றார். சம்பந்தரின் அடியவர்களில் ஒருவர் சம்பந்தர் பாடிய திருப்பதிகத்தினை ஓதி "புத்த நந்தியின் தலையில் இடி வீழக்கடவது" என கூறியதும், திருஞானசம்பந்தரின் வருகையை மாசுபடுத்திய அப்புத்த நந்தியின் தலையில் இடி வீழ்ந்து தலையும் உடலும் வேறாக அழியப் பெற்றதைக் கண்ட பிற பௌத்தர்கள் அச்சம் கொண்டு சிதறி ஓடினர்.

சைவ சமயத்தின் பெருமையும் நிறைமொழி மாந்தரான திருஞானசம்பந்தரின் திருவாக்கும் அத்திரம் போன்று ஏகிப் புத்த நந்தியை வீழ்த்தியது. இதனைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகிறார்,

ஏறுயர்த்தார் சைவநெறி ஆணை உய்க்க
எதிர்விலக்கும் இடையூற்றை எறிந்து நீக்கும்
மாறில்வலி மந்திரமாம் அசனி போல
வாய்மைஉரைத் திருத்தொண்டர் வாக்கி னாலே
வேறுமொழிப் போர் ஏற்பான் வந்த புத்தன்
மேனியையும் தலையினையும் வெவ்வே றாகக்
கூறுபட நூறியிடப் புத்தர் கூட்டம்
குலைந்தோடி விழுந்துவெருக் கொண்ட தன்றே
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 909)

அஞ்சி ஓடிய பௌத்தர்கள் நடந்தவற்றை சாரி புத்தனிடம் (பௌத்த கோட்பாடுகளை நன்கு அறிந்தவன்) அவனைத் திருஞானசம்பந்தரிடம் வாதம் புரிய அழைத்து வந்தனர். சாரி புத்தன் சம்பந்தருடன் வாதம் செய்தான். இறுதியில் சம்பந்தரின் வாதத்திற்கு பதில் கூற இயலாமல் தோற்றுப் போனான். அவனது வாதம் பொருத்தமற்றது என எடுத்துரைத்தார் சம்பந்தர். தன் தோல்வியைச் சாரி புத்தன் ஒப்புக்கொண்டான். இதர பௌத்தர்களும் சம்பந்தரரைப் பணிந்தனர். இதனைச் சேக்கிழார் பின்வருமாறு பாடுகிறார்,

ஆதலினால் உன்னிறைவன் பொருள்கள் எல்லாம்
அறிந்ததுநும் முத்திபோல் ஆயிற் றன்றே
ஏதமாம் இவ்வறிவால் உரைத்த நூலும்
என்றவனுக் கேற்குமா றருளிச் செய்ய
வாதமா றொன்றின்றித் தோற்றான் புத்தன்
மற்றவனை வென்றருளிப் புகலி மன்னர்
பாததா மரைபணிந்தார் அன்பர் தங்கள்
பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார்
(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 924)

அடியாரின் ஆற்றிய பணிகளில் தலையாயப் பணியாகத் திகழ்வது இறையிலிக் கொள்கைகளான சமண பௌத்த மதங்களின் தாக்கத்தை முறியடித்து மீண்டும் சைவத்தின் மலர்ச்சிக்கு வழிவகுத்ததாகும் (த. தியாகராாசன், 2017).[9] இதனால் வழி தவறிச் சென்ற மக்களை மீண்டும் மடைமாற்றம் செய்து சிவ நெறிக்கு அழைத்து வந்த பெரும் திருத்தொண்டினைச் செய்துள்ளனர். மேலும் தம் திருமுறைகளிலும் சமணத்தையும் பௌத்தத்தையும் கடிந்து பாடியுள்ளதைத் திருமுறைகளில் காண முடிகின்றது.

(iv) வைதீக பண்பாட்டுக்குத் திருஞானசம்பந்தரின் எதிர்ப்பு

சமண பௌத்த சமயத்தை நேரடியாக எதிர்த்த திருஞானசம்பந்தர் வைதீக சமயத்தை மறைமுகமாக எதிர்த்தார். வைதீக சமயம் வேதத்தையும் வேள்வியையும் முன்னிறுத்துகிறது. சிவக்கொழுந்தான ஞானசம்பந்தரின் தந்தையார் சிவபாத இருதயர் சிவவேள்வி செய்த

செய்தியினைச் சேக்கிழார் கூறியுள்ளார். மேலும் சீர்காழியில் நடைபெற்ற வேள்விகளைப் பற்றியும் பாடியுள்ளார். பல்லவர் காலத்தில் வடக்கே இருந்து வரவழைக்கப்பட்ட வேதியர்கள் ஐந்தெழுத்தினை ஏற்றுக்கொள்ளாது வைதீக நெறிப்பட்ட முறையில் திருக்கோயில்களில் பூசைகளைச் செய்தனர். இதற்கு மன்னர்களும் மித உறுதுணையாக இருந்துள்ளனர். பல்லவர் காலம் மட்டுமல்லாது இடைக்கால சோழர் காலத்திலும் இதே நிலைதான் நீடித்துள்ளது. வைதீக வேத நெறி முன்னிறுத்தப்பட்டு சைவ நெறி புறக்கணிக்கப்பட்டது. வைதீக சமயத்தைத் திருஞானசம்பந்தர் மறைமுகமாக எதிர்த்தாலும் அதனை முழு மூச்சாக எதிர்த்து சைவ சமயத்தின் மீட்சிக்கு வித்திட்டார் (அ. ச. ஞானசம்பந்தன், 1999)[7].

ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் என சிவ நெறியை மட்டுமே எடுத்தோதி சைவ நெறியை தழைத்தோங்கச் செய்தார். சம்பந்தர் காலத்தில் வேத வேள்வியும் சிவ வேள்வியும் இருந்துள்ளது. வேத வேள்வியானது தேவர்களை முழுமுதற் பொருளாக நினைந்து செய்யப்படும் வேள்வி. சிவ வேள்வியானது சிவபெருமானை முழுமுதற் பொருளாக நினைந்து செய்யப்படும் வேள்வி. திருஞானசம்பந்தர் வேள்விதனை ஆதரிக்கும் பாங்கில் எவ்வித திருமுறையும் காணப்படவில்லை. தாம் சிவ வேள்வி செய்யும் குடும்பத்தில் தோன்றியிருந்தாலும் தன் தந்தை செய்த சிவ வேள்விதனை இவர் செய்யவில்லை மாறாக செந்தமிழில் திருமுறைகளைப் பாடி திருக்கோயில் வழிபாட்டினைச் செய்ததைக் காண முடிகின்றது (ஞானசம்பந்தன், 1999)[7].

திருத்தலப் பயணம் மேற்கொண்ட திருஞானசம்பந்தர் திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் கோமுத்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சென்றார். அத்திருத்தலத்திற்கு தம் தந்தையார் சிவபாத இருதயர் சிவ வேள்வி செய்வதற்குப் பொருள் வேண்டி வந்தார். ஆதலால் பொருள் வேண்டி வந்த தந்தையாருக்கு பொருள் ஈட்டித் தருவது மகன் செய்யும் கடமையாகக் கருதினார் ஆளுடைப் பிள்ளை. அதன் பொருட்டு தம் தந்தையாரிடம் எல்லாவற்றுக்கும் முடிவில்லாது விளங்கி மேவும் பொருளானவன் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருவடிகளே என்று உணர்த்தினார். ஆயினும் சிவபெருமான் திருமுன் நின்று "உன் திருவடியைத் தவிர ஒன்று அறிந்திராத நான், பெருநிதி வேண்டியவர்க்குத் தரும் வகையில் யாதும் ஒன்றும் உற்றிலேன்" என்று "இடரினும் தளரினும்" (திருமுறை 3 பதிகம் 145) அருளினார்.

> சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயில்முன் பெய்தி
> நின்று போற்றுவார் நீள்நிதி வேண்டினார்க் கீவ
> தொன்றும் மற்றிலேன் உன்னடி அல்லதொன் றறியேன்
> என்று பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்தார்
>
> (திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 424)

வாழ் நாள் முழுக்க சிவவேள்வி செய்த சிவபாத இருதயரும் கூட தனக்குப் பொருள் வேண்டி தம் திருமகனார் திருஞானசம்பந்தரை வேண்ட, ஞானக்குழந்தையோ தண்தமிழ் திருமுறைகளைப் பாடி பெருமானிடம் பொருள் பெற்ற இச்செய்தியின் வழி வைதீக வழிபாட்டினை மறைமுகமாக எதிர்த்துச் சைவம் போற்றும் திருமுறை வழிபாட்டினை முன்னிறுத்தினார் ஞானசம்பந்தர்.

அந்தணர் மரபின்படி 7 வயது நிரம்பிய திருஞானசம்பந்தருக்கு முப்புரி நூல் அணிவிக்கும் சடங்கினை (உபநயனம்) ஏற்பாடு செய்தார் அவரது தந்தையார். அவ்வேளையில் வேத மந்திரங்களைச் சொன்ன அந்தணர்களுக்கு மந்திரங்களில் எல்லாம் முதன்மை மந்திரமானது

சிவபெருமானின் திருவைந்தெழுத்தே என்று உணர்த்தினார். பின்னர் “துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்” (திருமுறை 3 பதிகம் 22) எனும் திருவைந்தெழுத்து திருப்பதிகத்தை அருளினார். இதனைச் சேக்கிழார் இவ்வாறு பாடுகிறார்,

மந்திரங்க ளானவெலாம் அருளிச் செய்து
    மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறும்ஐயந் தெளிய எல்லாஞ்
    செழுமறையோர்க் கருளியவர் தெருளும் ஆற்றால்
முந்தைமுதன் மந்திரங்கள் எல்லாந் தோன்றும்
    முதலாகும் முதல்வனார் எழுத்தஞ் சென்பார்
அந்தியினுள் மந்திரம் அஞ்செழுத்து மேயென்
    றஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்

(திருஞானசம்பந்தர் புராணம் – பாடல் 266)

இந்நிகழ்வில் செந்தழல் ஓம்பும் செம்மை வேதியர்களுக்குத் திருவைந்தெழுத்தே முதன்மையான மந்திரம் என எடுத்துக் கூறி வேத வேள்வியை மறுப்பதோடு மட்டுமல்லாது திருமுறை வழிபாட்டினை முன்னிறுத்திய பாங்கினைக் காண முடிகின்றது. இது சம்பந்தர் செய்த சைவ மீட்சியின் வடிவமாகக் கருதுகின்றனர் சைவ சான்றோர்கள்.

(v) வைதீக பண்பாட்டுக்குத் திருநாவுக்கரசரின் எதிர்ப்பு

திருநாவுக்கரசர் வைதீக வழிபாட்டினை வன்மையாகவே எதிர்த்துள்ளார் என்பதை அவர் அருளிய திருமுறைகளின் வழி காண முடிகின்றது.

வேதம் ஓதில் என்? வேள்விகள் செய்கில் என்?
நீதி பல நூல்பல நித்தல் பயிறில் என்?
ஓது அங்கம் ஓர் ஆறும் உணரில் என்?
ஈசனை உள்வார்க்கு அன்றி இல்லையே

(திருமுறை 5 பதிகம் 99 பாடல் 4)

மேலும் வேத வேள்வியானது சூரியனை முன்னிறுத்திச் செய்யப்படும் வேள்வி என்பதனாலும் காயத்திரி மந்திரம் உச்சரிக்கப்படுவதாலும் அதனை மறுக்கும் வண்ணம் சூரியனைத் தலைமைக் கடவுளாகக் கருதாமல் சூரியனால் வணங்கப்படுகின்ற சிவபெருமானை வழிபடுங்கள் என பாடுகிறார்,

அங்கதி ரோன வனை யண்ணலாக் கருத வேண்டா
வெங்கதி ரோன்வ ழியே போவதற் கமைந்து கொண்மின்
அங்கதி ரோன வனை யுடன்வைத்த வாதி மூர்த்தி
செங்கதி ரோன்வ ணங்குந் திருச்சோற்றுத் துறைய னாரே.

(திருமுறை 4 பதிகம் 49 பாடல் 8)

**முடிவுரை**

சைவத்தின் சான்றோர் பெருமக்களாகக் கருதப்படும் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருக்கோயில்கள் தோறும் சென்று திருமுறைகளைப் பாடி திருக்கோயில்களைத் திறக்கச் செய்து மீண்டும் சிவ வழிபாட்டிற்கு புத்துயிர் அளித்தனர் (நாகப்பன் ஆறுமுகம், 2008)[1]. சமணத்தையும் பௌத்ததையும் முறியடித்து சைவ சமயத்தின் மீட்சிக்கு வித்திட்ட சைவத்தின் இரு கண்களாகக் கருதப்படுகிறனர். மேலும் சிவபெருமானை வழிபட்டால் உலகியல் பயனும் திருவடிப் பேறும் வாய்க்கும் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் ஆழமாக விதைத்தனர். இதன் வழி நலிந்த சைவ சமயம் மீண்டும் புத்துயிர் பெற்றது; காக்கப்பட்டது (வெள்ளைவாரணன் 2008)[10].

**மேற்கொள் நூல்கள்:**


1. Nagappan Arumugam. (2008). *Cittānta caivam [Siddhantha Saivam]*. Kuala Lumpur: Siva Enterprise.
2. Kandiah, N. S. (2003). *Intu camaya varalāṟu [History of Hidusim]*. Chennai: V.O.C Noolagam.
3. Rasamanikkanar, M. (1999). *Caiva camaya vaḷarcci [Development of Saiva Religion]*. Chennai: Poongodi Publication.
4. Rasamanikkanar, M. (2002). *Periyapurāṇa ārāycci [Reseach on Periya Puranam]*. Chennai: Alamu Publication.
5. Sundaramoorthi, K. (2014). *Cēkkiḻār tiruttoṇṭar purāṇam [Seikkilar Thiruthondar Puranam]*. Mayiladuthurai: Nyanasambantham Publication.
6. Poovai Kalyana Suntharanar. (2000). *Periyapurāṇam pēcum uṇmaikaḷ [Truth told by Periyapuranam]*. Chennai: Tamilnadu Deiva Seikkilar Council.
7. Nyanasambanthan, A. S. (1999). *Periya purāṇam ōr āyvu [Research of Periya Puranam]*. Chennai: Ganggai Book Centre.
8. Vaithiyanathan, K. (1995). *Caiva camaya varalāṟum paṉṉiru tirumuṟai varalāṟum [History of Saiva Religion and Twelve Thirumurai]*. Thiruvaavaduthurai: Sri Namachivaya Moorthi Publication.
9. Thiyagarajan, T. (2017). *Periya purāṇam; camūkap piṉṉaṉiyum maṉita uṟavukaḷum [Periya Puranam; Social Background and human relationship]*. Chennai: New Century Book House Pvt.Ltd.
10. Vellaivaranan, K. (2008). *Paṉṉiru tirumuṟai varalāṟu [History of Twelve Thirumurai]*. Chennai: Saradha Publication.